பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 06 வியாழக்கிழமை 24.11.2022 கதிர் 271

## யாழ். விபத்தில் குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த க. செறிஸ்டன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் (2)

## இன்றும் 5 அகதிகள் தமிழகத்தில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இன்று காலை 5 பேர் அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் தொடர் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாகப் பலரும் (8)

## விரைவில் தமிழரசுக்கு புதிய தலைவர் தெரிவு

### அதன்பின் கூட்டமைப்புக்கும் புதிய தலைவர் தெரிவு என்கிறார் மாவை சேனாதிராஜா



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது. அதன்போது தமிழரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். அதன்பின்னர் தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய பங்காளிக் (8)

# தமிழருக்குத் தீர்வு வழங்கப் பேராதரவு

### ஆனால் ஒற்றையாட்சிக்குள் என்கிறார் சஜித் பிரேமதாஸ



**எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழர் பிரச்சினைக்கு யதார்த்த ரீதியாக தீர்வு வழங்க ஜனாதிபதி முயற்சித்தால் அதற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். அதேவேளை, நடை முறையிலுள்ள 13 ஆவது திருத்தத்துக்கமைய - ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிரும் நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி என்றுமே உறுதியாகவுள்ளது.** (8)

## பஸ் - டிப்பர் மோதி விபத்து 15 பேர் வைத்தியசாலையில்

### கனகராயன்குளம் பகுதியில் சம்பவம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் பஸ் – டிப்பர் மோதிக்கொண்ட விபத்தில் 15 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை 5.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (2)

## சு.கவை ராஜபக்ஷக்களிடம் ஒப்படைக்க மைத்திரி திட்டம்

### சந்திரிகா கடும் ஆவேசம்




மைத்திரிபால சிறிசேனவும், தயாசிறி ஜயசேகரவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷக்களிடம் ஒப்படைக்கத் திட்டம் தீட்டுகின்றனர். (2)

## கோட்டாவை அரியணை ஏற்றவே ஈஸ்டர் தாக்குதல்

### சந்திரிகா குற்றச்சாட்டு

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் அமர்த்தவே, 2019 இல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டது.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (2)

## தவறிழைத்தோர் தீர்க்கமான முடிவெடுக்கச் சந்தர்ப்பமாம்

### ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்



வாக்களிப்பில் கலந்துகொள்ளாதவர்கள் வரவு – செலவுத்திட்டத்துக்கு எதிர்ப்பு என்று எவரும் அர்த்தம் கொள்ளக்கூடாது. தவறிழைத்தோர் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது தீர்க்கமான முடிவெடுக்கச் (2)

## ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்த முன்வாருங்கள்

### எதிரணியினருக்குப் பிரதமர் அழைப்பு



வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மெல்ல மெல்ல முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லும் சிறந்த ஒரு தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்நிலையில், எதிரணியினர் கட்சி வேறுபாடுகளை மறந்து நாட்டின் நன்மை (2)

## வியட்நாமிலுள்ள இலங்கை அகதி ஒருவர் உயிரிழப்பு

### சாவகச்சேரியைச் சேர்ந்தவர்

வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் 303 பேரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கைக்குச் செல்ல முடியாது எனக் கோரி, கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு இலங்கை அகதிகள் தற்கொலை செய்ய முயற்சித்திருந்தனர்.

இவ்வாறு தற்கொலை செய்ய முயற்சித்தவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்ததை அடுத்து, அவர் அந்த நாட்டின் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். (8)

## கோட்டாபயவுக்கு அழைப்பாணை



பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவை ஜனாதிபதி (2)

## கோட்டாபயவுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய எடுத்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பில், தனது சமர்ப்பணங்களை டிசம்பர் 16 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இது தொடர்பான மனுக்கள் இன்று முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பை வலுவிழக்கச் செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர, அவரது மனைவி சுமனா பிரேமச்சந்திர மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கசாலி ஹூசைன் ஆகியோர் இந்த மனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த மனுக்கள் தொடர்பில் முன்னதாக சீராக்கல் மனுவைத் தாக்கல் செய்திருந்த மனுதாரர்களின் சட்டத்தரணிகள், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பிரதிவாதியாகக் குறிப்பிட அனுமதி கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், கோட்டாபய ராஜபக்சவை சம்பந்தப்பட்ட மனுக்களில் பிரதிவாதியாகக் குறிப்பிட அனுமதித்ததுடன், டிசம்பர் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் அவருக்கு அழைப்பாணையை அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

## கோட்டாவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்தஞாயிறுதினத்தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்க வேண்டும் என்று சிலர் கோரிக்கை விடுக்கின்றனர்.

அவர் மீதான இந்தக் குற்றச்சாட்டை நான் நம்புகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றம் விரைவில் தீர்ப்பு வழங்கும் – என்றார்.

## யாழ்.விபத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சு.கவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு நான் முன்னின்று செயற்படுவேன்.

என்னைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்வதற்கு முன்னர், சுதந்திரமாகக் கருத்துக் கோரப்பட வேண்டும். அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை. கட்சி உறுப்பினரை இடைநிறுத்தும் நடைமுறை கூட தற்போது கட்சியில் இருப்பவர்களுக்குத் தெரியவில்லை.

இடைநிறுத்தம் பற்றி எனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு செய்தால்கூட எனக்குப் பரவாயில்லை. ஏனெனில் மாற்றுத் தரப்பிடம் கட்சி பெயர் பலகை மட்டுமே உள்ளது. மக்கள் சக்தி எமது பக்கம் உள்ளது.

மைத்திரிபாலவும், தயாசிறியும் கட்சியை ராஜபக்சக்களிடம் ஒப்படைக்கத் திட்டம் தீட்டுகின்றனர் – என்றார்.

## பஸ்-டிப்பர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்காலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸும் மாங்குளத்திலிருந்து கனகராயன்குளம் நோக்கிச் சென்ற டிப்பரும் மோதிக்கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது டிப்பர் சாரதி உட்பட பஸ்ஸில் பயணித்த பயணிகள் உள்ளிட்ட 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்தில் காயமடைந்தவர்கள் மாங்குளம், வவுனியா மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தவறிழைத்தோர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பம் உண்டு. – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2023 'பட்ஜட்' இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம் தொடர்பில் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எந்தச் சதி முயற்சியாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது. இதனை வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் முடிவு எடுத்துக் காட்டுகின்றது.

நாடு மீதும் மக்கள் மீதும் அக்கறையுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்தே தீர வேண்டும்.

எமது நாடு மீண்டெழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்களித்துள் ளனர். சுயநல அரசியல் எண்ணம் கொண்டவர்கள் எதிராக வாக்களித்துள்ளனர்.

அதேவேளை, வாக்களிப்பில் கலந்துகொள்ளாதவர்கள் எதிர்ப்பு என்று எவரும் அர்த்தம் கொள்ளக் கூடாது. தவறிழைத்தோர் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது தீர்க்கமான முடிவெடுக்கச் சந்தர்ப்பம் உண்டு – என்றார்.

'பட்ஜட்' இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 19 எம்.பிக்கள் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதி ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த முன்வரவேண்டும்.

– இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.

நாட்டின் சமகால நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புபெரும்பான்மைவாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. மூன்றாம் வாசிப்பும் பெரும்பான்மையுடன் நிறைவேறும். அதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

தற்போதைய நிலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டும். வாக்களித்த மக்களின் நலனைப் பற்றியே கவனம் செலுத்த வேண்டும். ஆனால், எதிர்க்கட்சியினர் அதற்கு மாறாகச் செயற்படுகின்றனர். அவர்கள் தங்களைச் சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

என்னதான் சவால்கள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு இந்த அரசு தொடர்ந்து வெற்றிப் பாதையில் பயணிக்கும் – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எல்லை மீறும் அதிகாரம்

அமைதியான போராட்டம் உட்பட அடிப்படை உரிமைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம் மதிப்பளிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

இது, தனித்து அந்த அமைப்பின் கோரிக்கை மட்டுமல்ல, பெரும்பாலான சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் பலவற்றினதும் கோரிக்கையும் வற்புறுத்தலும் கூட.

ஆனால் ஜனாதிபதி ரணில் இதற்குத் தலைகீழாக – மாறாக – ஒற்றைக்காலில் பிடிவாதம் பிடித்தபடி மூக்கத்தனமாக நாடாளுமன்றத்தில் அறிவிப்பு விடுக்கின்றார்.

“என்னைப் போன்ற சர்வாதிகாரி எங்கும் இல்லை என்று வெளிநாட்டு ஊடகங்களுக்குக் கூறுகிறார்கள். என்னை ஒரு ஹிட்லர் என்று சித்திரிக்கிறார்கள். நான் ஒரு சர்வாதிகாரி என்று அல் ஜஸீரா விமர்சிக்கின்றது. நான் ஹிட்லரைப் போன்ற சர்வாதிகாரி என்று கூச்சலிடுங்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.” – என்றெல்லாம் எடுத்தெறிந்து, விட்டேத்தியாக நாடாளுமன்றத்திலேயே பேசுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நிறைவேற்று அதிகார பதவி நிலைக் கதிரை கிட்டியமை அவரை இப்படி எல்லாம் பேசச் செய்கின்றது.

இவை எல்லாவற்றையும் தாண்டி, ஜனாதிபதி தமது அதிகாரத்தின் எல்லையை மீறும் ஓர் இடம் இருக்கின்றது. அதை அவர் தாண்டி இருக்கின்றமைதான் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகின்றது.

“அரசாங்கத்தை மாற்றுவதற்கு இன்னும் ஒரு போராட்டத்தை நடத்த முயற்சித்தால் அதற்கு அனுமதிக்க மாட்டேன். இராணுவம் பயன்படுத்தப்படும். அவசர காலச் சட்டம் பயன்படுத்தப்படும்” – என்று வெளிப்படையாக அறிவித்தமை மூலம் ரணில் தமது உண்மை முகத்தை அம்பலப்படுத்தி நிற்கின்றார்.

அரசைக் கவிழ்க்க அல்லது மாற்ற வன்முறை வழிகளை நாடாதீர்கள் என்று கூறுவது வேறு.

அரசைக் கவிழ்க்க அல்லது மாற்றவும் தங்கள் எதிர்ப்பைக் காட்டவும் வீதிக்கு இறங்கும் மக்கள் மீது இராணுவத்தை ஏவுவேன் என்று திமிர்த்தனமாக நாடாளுமன்றத்தில் பேசுவது வெளிப்படையாக பாஸிஸப் போக்கு; அராஜகம்; அட்டூழியம்.

வெறும் வாக்குச் சீட்டில் பேனாவினால் புள்ளடி போடும் அமைதி முறையில்தான் நிறைவேற்றதிகாரத்தையோ அல்லது பிற பதவிகளையோ அரசியல்வாதிகளுக்கு மக்கள் கையளிக்கிறார்கள். அப்படிச் செய்தால் அடுத்த ஐந்து வருடங்களுக்கு, அடுத்த முறை வாக்கு சீட்டும் பேனாவும் கையில் கிடைக்கும்வரை, நாட்டு மக்கள் வாயை மூடி மௌனியாக சகலவற்றையும் சகித்துக் கொண்டிருக்க வேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார் போலும்.

தவறானவர் பதவிக்கு வந்தால் அவரை வீட்டுக்கு அனுப்புவதற்கு, சட்டத்துக்கு உட்பட்ட முறையில் மக்கள் வீதிக்கு இறங்குவதை, தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதை, சகிக்க வேண்டியது ஜனாதிபதியின் கடமையும் பொறுப்பும். வன்முறையைக் கையில் எடுத்தால் அது வேறு விடயம். அது புரியாதவர் போல பொதுவாகப் பேசி எல்லாப் போராட்டங்களையும் இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என்பது மமதையின் உச்சக்கட்டம் அன்றி வேறில்லை.

# எமக்கு வழிகாட்டியாக திகழ்ந்தவரின் இழப்பு எமக்கும் இ.தொ.காவுக்கும் பேரிழப்பு ஆகும்!

### எம்.ராமேஷ்வரன் இரங்கல்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக செயற்பட்ட முன்னாள் தலைவர் முத்து சிவலிங்கத்தின் இழப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு பாரியதோர் இழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

மலையக மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த பெருந்தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பிறகு முத்து சிவலிங்கத்தின் திடீர் மறைவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு வேதனையளிக்கிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் இவர், மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு, கூட்டு ஒப்பந்த பேச்சு மற்றும் மலையக மக்களுக்கு தேவையானவற்றை அறிந்து, அனைத்து நடவடிக்கைகளையும் மிக துல்லியமாக முன்னெடுத்து வந்தார்.

அதுமட்டுமின்றி, மலையகத்தில் பல தோட்டங்களுக்கு மின்சாரத்தையும் பெற்றுக்கொடுத்துள்ளார். எமது ஸ்தாபனத்தின் மூத்த தலைவர் என்ற ரீதியில் எமக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த அன்னாரின் இழப்பு எமக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் காலம் முதல் அமரர் முத்து சிவலிங்கம் பெருந்தோட்டத்துறைக்கு பல்வேறு முன்மாதிரியான சேவைகளை ஆற்றியதோடு, நாடாளுமன்றத்திலும் மலையக மக்களுக்காக குரல் எழுப்பியுள்ளதோடு, அமைச்சராகவும், பிரதியமைச்சராகவும் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார்.

அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிரியைகளுக்கு சேலை கட்டாயம் சுற்று நிருபம் நேற்று வெளியாகிறது!

பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு சேலையைக் கட்டாயமாக்கும் சுற்று நிருபம் நேற்று (புதன்கிழமை) வெளியிட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாடசாலை ஆசிரியர்கள் பணிக்காக சேலைக்குப் பதிலாக வேறு ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு வருகை தந்துள்ளனர்.

இதன் காரணமாகவே இந்த புதிய சுற்றறிக்கை வெளியிட்டதாக செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

# நாட்டில் பல அத்தியாவசிய உணவு பொருள்களின் விலைகள் குறைப்பு!

இன்று (வியாழக்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச பல அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ வெள்ளை சீனியின் விலை 229 ரூபாவாகவும், கோதுமை மா 265 ரூபாவாகவும், உள்ளி 495 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

அத்துடன், ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 255 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச மேலும் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த குற்றச்சாட்டு: ஏழு பேரைக் கைதுசெய்யுமாறு பிடியாணை பிறப்பிப்பு!

கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் 7 சந்தேகநபர்களைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சந்தேகநபர்களை நேற்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவர்களை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# நாட்டைப் பற்றிச் சிந்தித்து போராட்டங்களை நிறுத்துக!

### குமார வெல்கம கோரிக்கை



நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் நாட்டைப் பற்றிச் சிந்தித்து ஓரிரு வருடங்கள் போராட்டத்தை நிறுத்துமாறு குமார வெல்கம கேட்டுக்கொண்டுள்ளார்.

போராட்டங்கள் மூலம் ஒரு நாட்டை அபிவிருத்தி பாதைக்கு இட்டுச்செல்ல முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வந்தால்தான் டொலர்கள் வரும் என்றும் போராட்டங்கள் நடத்தினால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜாவாத் தீவில் பூகம்ப இடிபாடுகளிலிருந்து 3 நாள்களின் பின் 6 வயதுச் சிறுவன் மீட்பு





ஜகார்த்தா, நவ.24

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா தீவில் உள்ள சியாஞ்சூர் நகரில் கடந்த திங்கட்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் இடிபாடுகளில்சிக்கியவர்களை மீட்பதற்கான பணிகள் தொடர்ந்து நடந்துவந்தது. அந்த வகையில் நேற்றுஜ் காலை இடிபாடுகளில் இருந்து மேலும் 90 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இதன் காரணமாக, தற்போது இந்த நிலநடுக் கத்திற்கு பலியானோர் எண்ணிக்கை 271

ஆக உயர்ந்துள்ளது. இறந்தவர்களில் பலர் குழந்தைகள். மேலும் 100 க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. தொடர்ந்து தேடுதல் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தொடர்ந்து மீட்பு பணியில் சியாஞ்சூர் பகுதியில் குகநாங் துணை மாவட்டத்தில், நக்ராக் கிராமத்தில் நடந்த தேடுதல் பணியில், நிலநடுக்க இடிபாடுகளில் சிக்கிய 6 வயது சிறுவனை மீட்பு பணியினர் உயிருடன் மீட்டுள்ளனர்.

இந்த இடிபாடுகளில் 3 நாள்களாகச் சிக்கியிருந்த அஜ்கா மவுலானா மாலிக் என்ற அந்தச் சிறுவனை இந்தோனேசிய தேசிய பேரிடர் மேலாண் கழகம் மீட்டு உள்ளது. எனினும், இந்த நிலநடுக்கத்தில் சிறுவனின் பாட்டி உயிரிழந்து விட்டார். அவரது உடல் அருகிலேயே சிறுவன் கிடைத்துள்ளான். சிறுவனின் பெற்றோரின் உடல்கள் முன்பே மீட்கப்பட்டு இருந்தன. இதுபற்றிய வீடியோ ஒன்றும் வெளியிடப்பட்டு உள்ளது. இதனால், இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்கள் மீட்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களின் உறவினர்களுக்கு ஏற்பட்டு உள்ளதாக அங்கிருந்து வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சீனாவில் கடும் கொரோனா விதிமுறைகளுக்கு அடங்காமல் கொதித்தெழுந்த தொழிலாளர்கள்






பீஜிங், நவ.24

சீனாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று பரவல் வேகமடைந்துள்ள காரணத்தினால் தலைநகர் பீஜிங், ாங்காய் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கடுமையான கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் மத்திய சீனாவில் உள்ள செங்சாவு மாகாணத்தில் கொரோனா பரவல் காரணமாக தீவிர கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அங்கு அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய ஐபோன் தொழிற்சாலையில் பணிபுரியும் 2 லட்சம் ஊழியர்கள் வலுக்கட்டாயமாக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், ஐபோன் தொழிற்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இடத்தில் இருந்து வெளியே வந்த ஊழியர்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பொலிஸார் அவர்களை விரட்டியடிக்க முயன்றபோது இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஊழியர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினா. இதில் பலர் காயம் அடைந்தனர் என்றும் மேலும் தொழிலாளர்கள் பலரை பொலிஸாள கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



## அமெ. சுப்பர்மார்கெட்டில் சூடு ஊழியர்கள் உள்பட 7பேர் பலி!

வொஷிங்டன், நவ.24

அமெரிக்காவின் வெர்ஜீனியா மாகாணம் செசப்ஹூ நகரில் உள்ள வால்மார்ட் நிறுவனத்தின் சுப்பர் மார்க்கெட்டில் நேற்று இரவு ஊழியர்கள் வழக்கமான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, அந்த சுப்பர் மார்க்கெட் மேலாளர் தான் வைத்திருந்த துப்பாக்கியைக் கொண்டு அங்கு பணியில் இருந்த ஊழியர்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டுத் தாக்குதல் நடத்தினார். இந்ததத் தாக்குதலில் ஆறு ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலாளர் துப்பாக்கிச்சூடு நடத்தியதை கண்டு அதிர்ச்சியடைந்த சுப்பர் மார்க்கெட் ஊழியர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ளத் தலை தெறிக்க ஓடினர். ஆனால், தொடர்ந்து மேலாளர் துப்பாக்கிச்சூட்டு நடத்தினார். இந்த துப்பாக்கிச்சூடு குறித்து தகவலறிந்த பொலிஸா சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

ஆனால், மேலாளர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சுப்பர் மார்க்கெட் ஊழியர்கள் 6 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய சுப்பர் மார்க்கெட் மேலாளரும் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார். இதையடுத்து, பொலிஸாட் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்தத் துப்பாக்கிச்சூட்டிற்கான காரணம் குறித்து விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர்.

## நூற்றுக் கணக்கானவர்கள் முன் பெண்களுக்கு கசையடித் தண்டனை கொடுத்த தலிபான்கள்!

ஆப்கானிஸ்தானில் மைதானம் ஒன்றில் நூற்றுக் கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் பெண்கள் உள்பட 12 பேருக்கு தலீபான்கள் கசையடித் தண்டனை கொடுத்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலீபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதனையடுத்து, ஆப்கானிஸ்தானில் பெண்களின் சுதந்திரம் முற்றிலும் தடைபட்டது. பெண்கள் சுதந்திரம், கல்வி, ஆடை சுதந்திரம் உள்பட பல்வேறு துறைகளிலும் பெண்கள் மீது தலீபான்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்ந்து விட்டுள்ளனர். அதேபோல், இஸ்லாமிய மத சட்டங்களை ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் அமுல்படுத்தி வருகின்றனர். இந்த சட்டங்கள் மூலம் கடுமையான கட்டுப்பாடுகள், தண்டனைகளும் விதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் லோகர் மாகாணத்தின் பல் ஆலம் நகரில் மைதானத்தில் நூற்றுக் கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் பெண்கள் உள்பட 12 பேருக்குத் தலீபான்கள் கசையடித் தண்டனை கொடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருட்டு, பாலியல் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டு, நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்ட 3 பெண்கள், 9 ஆண்கள் என மொத்தம் 12 பேர் பல் ஆலம் நகரில் உள்ள மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அந்த மைதானத்தில் நூற்றுக்கணக்கான ஆண்கள் குவிந்திருந்தனர். தண்டனை வழங்கப்படுவதை பார்வையிட வருமாறு டுவிட்டர் உள்பட சமூகவலைதளம் அழைப்பு விடுப்பட்டது. இதனைத் தொடர்ந்து காலை மைதானத்தில் நூற்றுக்கணக்கான ஆண்கள் குவிந்தனர். அங்கு குற்றஞ்சாட்டப்பட்ட 3 பெண்கள் உள்பட 12 பேரும் மைதானத்தில் மையப்பகுதியில் நிறுத்தப்பட்டனர்.

அங்கு குற்றத்தின் அடிப்படையில் 12 பேருக்கும் தலீபான்கள் 21 முதல் 39 கசையடிகள் தண்டனையாக வழங்கினர். தலீபான்கள் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய சட்டமான ரியா சட்டத்தை அமுல்படுத்தி கடுமையான தண்டனைகள் விதித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சபரிமலையில் ஒரு வாரத்தினுள் 3 லட்சம் பக்தர்கள் குவிந்தனர்!





கேரளா, நவ.24

கேரளாவில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை விழா நடந்து வருகின்ற நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா பிரச்சினை காரணமாக கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. தற்போது இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையால் சபரிமலை செல்லும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் வடமாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் ஐயப்பனைத் தரிசிக்க வந்த வண்ணம் உள்ளனர். இதனால் சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. பக்தர்கள் 18 ஆம் படி ஏற பல மணிநேரம் காத்திருக்கின்ற நிலைமையும் உருவாகியுள்ளது.

மண்டல பூஜைக்காக சபரிமலை நடை கடந்த 16 ஆம் திகதி திறக்கப்பட்டது. 17 ஆம் திகதி முதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்துள்ள பக்தர்கள் உடனுக்குடன் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். நடை திறந்து ஒரு வாரம் ஆன நிலையில் இதுவரை சுமார் 3 லட்சம் பக்தர்கள் கோவிலுக்கு வந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை சனி, ஞாயிறு தினங்களில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்ப்பதாக கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே கோவிலில் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றி தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றதாகக் கூறப்படுகின்றது. மேலும் அப்பம், அரவணை உள்ளிட்ட பிரசாதங்கள் பக்தர்களுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## மோடி ஆட்சியில் வராக் கடன்கள் 18 லட்சம் கோடி ரூபாவாக உயர்வு



டெல்லி, நவ.24

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை வாராக்கடன்கள் ரூ.5 லட்சம் கோடியாக இருந்தன. மோடி ஆட்சிக்காலத்தில், 2014 ஆம் ஆண்டில் இருந்து 2020 ஆம் ஆண்டுக்குள் இது ரூ.18 லட்சம் கோடியாக உயர்ந்து விட்டது என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித்தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீநேட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

5 ஆண்டுகளில் 365 சதவீதம் வராக்கடன்கள் அதிகரித்துள்ளது. இதுகுறித்து மத்திய அரசு விளக்கம் அளிக்க வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூபா.10 லட்சம் கோடி வாராக்கடன்

கணக்கு புத்தகத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. அவற்றில் ரூபா 13 ஆயிரம் கோடி மட்டுமே திரும்ப வசூலிக்கப்பட்டுள்ளது

ரூபா.10 லட்சம் கோடி வாராக்கடனில், 61 சதவீத நிதி பற்றாக் குறையை சரிசெய்து விடலாம். ஒரு சில தொழிலதிபர்களுக்கு மட்டுமே இந்த ஆட்சியில் பலன் கிடைக்கிறது. வங்கிக்கடன் பெற்று வேண்டுமென்றே திரும்ப செலுத்தாத 38 பேர், நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர். அவர்களை இந்தியாவுக்கு கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? சொத்துகளை அடிமாட்டு விலைக்கு விற்க பொதுத்துறை வங்கிகளுக்கு கட்டுக்கடங்காத அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பா.ஜனதா, தனது சாதனைகளை சொல்லியோ, பிரச்சினைகளை முன்வைத்தோ தேர்தலை சந்திப்பது இல்லை. பிரதமர் மோடியின் முகத்தை வைத்தே போட்டியிடுகிறது. – இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஜல்லிக்கட்டு போட்டிக்கு எதிரான மனு இன்று விசாரணைக்கு..!!



புதுடெல்லி, நவ.24

ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க கோரி பீட்டா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தொடர்பிலான விசாரணை இன்று நடைபெறவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி உற்சாகமாக நடத்தப்படுகிறது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், கடந்த 2014 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்தது. இதனால் ஜல்லிக்கட்டு நடத்த முடியவில்லை. ஆனால் பாரம்பரிய விளையாட்டை நடத்தியே தீர வேண்டும் என்று தமிழகத்தில் தன்னெழுச்சியாக போராட்டம் நடந்தது.

சென்னை மெரினாவில் திரண்டு இளைஞர்கள் நடத்திய அமைதி போராட்டத்தை உலகமே

வியந்து பார்த்தது. இதன் தொடர்ச்சியாக தமிழக சட்டமன்றத்தில் ஜல்லிக்கட்டு தொடர்பாக அவசர சட்டம் கடந்த 2017 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்துக்கு ஜனாதிபதியும் ஒப்புதல் அளித்ததால் தற்போது தடையின்றி ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது. ஆனால் இந்த அவசர சட்டத்தை எதிர்த்தும், ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கக் கோரியும் பீட்டா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளன. இந்த நிலையில், ஜல்லிக்கட்டுக்குத் தடை கோரிய மனுக்கள் மீதான விசாரணை நேற்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் நேரம் இல்லாமையால் இந்த மனுக்கள் அனைத்தும் இன்று (வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு விசாரணை நடைபெறும் என தெரிவிதக்கப்பட்டது இன்று அந்த விசாரணை இடம் பெற்றது.

## விவசாயத் தேவைகளுக்கான தீர்வை வழங்குமாறு கோரி பஞ்சாப் விவசாய சங்கத்தின் தலைவர் உண்ணாவிரதம்



சண்டிகர், நவ.24

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த விவசாயச் சங்க தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால், தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்த வேண்டும் மற்றும் சீரற்ற வானிலை மற்றும் பூச்சித் தாக்குதலால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி பரித்கோட் மாவட்டத்தில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஜக்ஜித் சிங் கடந்த 19ஆம் திகதி சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார். அவரது போராட்டம் நேற்று 5 ஆவது நாளை எட்டியது. உண்ணாவிரதப் போராட்டத்தால் அவரது இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்து வருவதோடு, அவரின் உடல் எடையும் வெகுவாக குறைந்துள்ளது என்று தெரைவிக்கப்படுகின்றது.

எனினும், உடல் நிலை மோசமடைந்து வருவதை பற்றித் தான் கவலைப்படவில்லை என்றும், ஒரு வேளை இந்த போராட்டத்தில் தான் இறந்தாலும், விவசாயிகள் தங்கள் போராட்டத்தை அமைதியான முறையில் தொடர வேண்டும் எனவும் ஜக்ஜித் சிங் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை ஆயிஷாவில் பசிபோக்கும் வேலைத்திட்டம்









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் நலன் கருதி பாடசாலையில் உணவுப் பெட்டகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில், றிஷிலைன்ஸ் பவுன்டேசனின் அனுசரணையில் இந் நிகழ்வு பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இங்கு ஓர் உணவுப் பெட்டகம் வைக்கப்பட்டுள்ளது. அதில் மாணவிகளின் பசி நீக்க உணவுப் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. அதில், தேவையான மாணவிகள் எடுத்துக் கொள்ளவும், இயலுமான மாணவிகள் வைத்துச் செல்லவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இத் திட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.றமீஸா, பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நஸீர், பாடசாலை பிரதி அதிபர் ஏ.ஆர்.முகைதீன் பாவா, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.ஐ.எம்.பஸீல், உறுப்பினர் இம்தியாஸ், பகுதித் தலைவர் கே.ஆர்.எம்.இர்ஃபாத், இளைஞர் சேவை பயிலுனர் ஏ.எஸ்.ஹரிஸ் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## அம்பாறையில் பனிமூட்டம்





அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் கடந்த ஐந்து நாள்களுக்கு மேலாக அதிகாலை முதல் பனிமூட்டம் நிலவி வருகிறது. இதனால் மாவட்டத்தில் பிரதான வீதியால் செல்லும் வாகன சாரதிகள், பொதுமக்கள், போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இந்த பனி மூட்டம் அதிகாலையில் இருந்து காலை 7 தொடக்கம் 8 மணி வரை நீடிக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் போன்ற பல பிரதேசங்களிலும் அதிகமாகக் காணப்படுகிறது.

## கிழக்கு மாகாணப் பிரதம செயலாளரின் பணிமனயில் விதை விற்பனை நிலையம்









(ஹஸ்பர்)

திருகோணமலையில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் விதை மற்றும் நடு கைப்பொருள்கள் விற்பனை நிலையம் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம்.எஸ். பி.ரத்னா நக்கவினால் நேற்றுத் திறந்து வைக் கப்பட்டது.

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் அனுசரணையில் மாகாண விவசாய திணைக்கள நலன்புரிச்சங்கம் இதன் செயற்பாடுகளை முன் னெடுக்கவுள்ளது.

கத்தரி, மிளகாய், வெண்டி, தக்காளி உள்ளிட்ட 10 வகையான மரக்கறி மற்றும் பழவகை விதைகள் உள்ளடங்கிய பக்கெற் 200 ரூபாயக்கும் Tom EJC ,விலாட் மற்றும் கறுத்தகொழும்பான் ஆகிய மாமரக்கன்றொன்று 350 ரூபாவுக்கும் ஏனைய மரக்கன்றுகள் 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் சேதனப்பசளைகள், விவசாய உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களும் இங்கு விற்பனை செய்யப்படவுள்ளன. தமக்கு அவசியமான காய்கறி மற்றும் பழ வகைகளை வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்வதை ஊக் கப்படுத்தும் நோக்கில் இவ்விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டு. காங்கேயனோடையில் கைக்குண்டுடன் இருவர் கைது

சக்திவாய்ந்த கைக்குண்டுடன் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காங்கேயனோடையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான் குடி பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.றஹீம் தெரிவித்தார்.

காங்கேயனோடை பிரதேசத்தில் வீடொன்றை உடைத்துப் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்ட நபர்களே இவ்வாறு கைக்குண் டுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களிடமிருந்து கையடக்க தொலைபேசிகள், 50 ஆயிரம் ரூபா பணம், வாசனைத் திரவியங்கள் உட்பட வீட்டு பாவனைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் கைக்குண்டைக் காண்பித்து மிரட்டிகொள்ளைச் சம்பவத்தில் நீண்டநாட்களாக ஈடுபட்டுவந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# காரைதீவு டெங்கு ஆபத்தில்: இதுவரை 49 நோயாளிகள்!

## உதவுமாறு சுகாதார வைத்திய அதிகாரி அவசர வேண்டுகோள்





(வி.ரி. சகாதேவராஜா)

சமகால காலநிலை காரணமாக காரைதீவுப் பிரதேசம் டெங்கு ஆபத்தை எதிர்நோக்கி இருக்கின்றது. இதுவரை 49 நோயாளிகள் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். எனவே பொதுமக்கள், நிறுவனங்கள் சகல தரப்புகளும் இதனை ஒழிப்பதற்கு உதவ வேண்டும்.

– இவ்வாறு காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார் .

டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான விசேட அவசர கூட்டம் இன்று வியாழக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதேச செயலகம் பிரதேச சபை அதிபர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். அங்கு சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவிக்கையில் –

மழைக்கு பிந்திய இந்தக் காலகட்டத்தில் டெங்கு நோய்பெருகுகின்ற ஆபத்து கூடுதலாக காணப்படுகின்றது. குறிப்பாக காரைதீவு 8 ,10 ,11, 12 ஆகிய பிரதேசங்களில் கூடுதலான டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டு வருகிறார்கள். எங்களை பொறுத்தவரையிலே இதற்கு விசிற வேண்டிய இரசாயன பொருடல்ள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே பொது நிறுவனங்கள், பொதுமக்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

இரசாயனப் பொருட்களைத் தருவது மாத்திரம் அல்ல, சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதும் உங்கள் கடமையாகும். வெற்றுக் காணி வைத்திருப்பவர்கள் உடனடியாக அவற்றைச் சுத்தமாக்கி கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உங்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை அனைத்தும் எடுக்கப்படுகின்றன. – என்றார்.

## மன்னார் நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு –செலவு திட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்!



மன்னார் நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று (புதன்கிழமை) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மன்னார் நகர சபையின் 57 ஆவது அமர்வு நேற்று நகர சபையின் தலைவர் என்.அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவு இடம்பெற்றது.

இதன் போது மன்னார் நகர சபையில் 6 கட்சிகளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு ஆதர வை ஏகமனதாக முன் மொழிந்து நிறைவேற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஆகிய கட்சிகளை சேர்ந்த 16 உறுப்பினர்கள் அமர்வுக்கு வருகை தந்து 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிந்தனர்.

எதிர்வரும் ஆண்டுக்கான 22 கோடியே 34 லட்சத்து 81 ஆயிரத்து 890 ரூபா மன்னார் நகர சபையின் வருடாந்த வருமானத்தைக் கணக்கில் கொண்டு நகர சபைக்கு உட்பட்ட வட்டார ரீதியாகவும் வட்டார உறுப்பினர்களின் பிரசன்னத்தோடு வட்டார சங்கங்களின் நிர்வாகம் மற்றும் அபி விருத்தி சம்பந்தமான அமைப்புக்களுடன் கலந்து ஆலோசனையின் பேரில் இந்த வரவு செலவு திட்டம் மன்னார் நகரத்தின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினர் முல்லை மாவட்ட அரச அதிபருடன் சந்திப்பு!

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினர் நேற்று (புதன்கிழமை) காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனைச் சந்தித்து தமது திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

உலக உணவுத்திட்டத்தின் சகோதர நிறுவனமான ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் சுகாதாரம் மற்றும் நலன் பேணல் சேவைகளுக்கான மேலதிக பண உதவியாக ஐயாயிரம் ரூபாவை வழங்கும் திட்டத்தை முல்லைத்தீவில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதனை கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஊனமுற்றவர்கள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்கள், சுகாதார வைத்திய சேவைகள் அதற்கான போக்குவரத்து மற்றும் போசாக்கு போன்றவற்றிற்கு பயன்படுத்த முடியும்.

இதேவேளை உலக உணவுத் திட்டம் உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவியை முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்கி வருகிறது.

தாய்வழி சுகாதாரம் மற்றும் விரிவான பாலியல் கல்வி மற்றும் இலங்கையில் ஏற்பட்டுள்ள அண்மைய பொருளாதார நிலைமையின் விளைவாக டபிள்பு.எப்.பி, யு.என்.எப்.பி.ஏ. உடன் இணைந்து மிகவும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்க அரசாங்கத்துக்கு உதவுவதுடன், குறிப்பாக பெண்களின் அத்தியாவசிய தேவைகளை பண மானியம் மூலம் பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ளது.


இலங்கையில் நடத்தப்பட்ட பல்வேறு சமீபத்திய ஆய்வுகளின்படி, பொருளாதார நெருக்கடியால் பெண்கள் விகிதாசாரத்தில் பாதிக்கப்படுகின்றனர். அடிப்படைப் பொருள்களுக்கான விலைகள் உயர்ந்துள்ளதால், டபிள்யு.எவ்.பி மற்றும் யு.என்.எவ்.பி.ஏ. பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு முன்னுரிமையாக இருப்பதை உறுதிப்படுத்தும் திட்டமாக இது அமையவுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் அதிகாரிகளான நிசாடி மற்றும் சிகார் ஆகியோருடன் உலக உணவுத் திட்டத்தின் மாவட்ட பொறுப்பதிகாரி ஜெயபவாணி, மாவட்ட உலக உணவுத்திட்ட உத்தியோகத்தர்கள், சர்வோதயம் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ். செங்குந்தாவில் வீடுடைத்துத் திருட்டு!

யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றை உடைத்து ஒரு பவுண் தங்க தோடுகள் இரண்டு, 30 அங்கர் பால்மா பெட்டிகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை திருடி சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுளளது.

வீட்டில் வசிப்போர் வேலை நிமித்தம் செவ்வாய்க் கிழமை வெளியே சென்ற சமயம் வீட்டின் வளவினுள் அத்துமீறி நுழைந்த திருடர்கள் , வீட்டின் கதவை உடைத்து, வீட்டினுள் புகுந்து திருட்டில் ஈடுபட்டு தப்பி சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





## விரைவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைமைகள் தொடர்பில் இணையம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தற்போது உடல் வலிமை குறைந்து இருந்தாலும் அவருடைய அனுபவம், அவருடைய ஆற்றல், அவர் வெளியிடும் சொற்கள் எப்போதும் வலிமையுடையவையாக இருக்கின்றன.

தந்தை செல்வாவும் தனது நீண்ட கால வரலாற்றில் உண்ண முடியாமல், நடக்க முடியாமல், உரைத்துப் பேச முடியாமல் இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவரை அங்கீகரித்து இருந்தார்கள். இறுதி வரைக்கும் அவர் அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியில் அவர் தலைவராக, செயலாளராக, பெருந்தலைவராகக் கூட இருந்துள்ளார். ஜனநாயகவழியில் அந்தப் பதவிகளுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆனாலும், எங்களுடைய தமிழரசுக் கட்சியிலே ஒரு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது, இப்போதும் அது நடக்கப் போகின்றது. கட்சியில் தந்தை செல்வா போல் யார் தலைவராக இருந்தாலும் ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கிடையில் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய நடைபெறுகின்ற மாநாடுகளில் நாங்கள் அடுத்தடுத்த தலைவர்களையும் தெரிவு செய்து வந்திருக்கின்றோம்.

மாநாட்டில் தலைவர் தெரிவு செய்யப்பட்டால் அவர்தான் கட்சியின் தலைவராகச் செயற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நடைமுறை அனைத்துக் கட்சிகளிலும் இருக்கின்றது எனச் சொல்ல முடியாது.

விரைவில் எங்கள் தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடும்; பொதுக்குழு கூடும். மாநாட்டுக்கான திகதியை டிசம்பரில் அல்லது சில மாதங்களுக்குள் நிர்ணயிக்கவுள்ளோம். அதற்கமைய கட்சியின் மாநாடு கூடி கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வோம். அதில் எந்தவிதமான தயக்கமும் கிடையாது.

அதன்பின்னர் எங்களுடைய தமிழரசுக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள் – என்றார்.

## வியாநாமிலுள்ள......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு சிகிச்சை பெற்று வந்த ஒருவரே, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வியட்நாமிலுள்ள இலங்கை அகதி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 37 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கிரிதரன் என்பவரே இவ்வாறு மரணித்துள்ளார்.

சடலத்தை மீள வழங்குவதற்கு அந்த நாட்டு அதிகாரிகள் பாரிய தொகையைக் கோரி வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், குறித்த நபரின் சடலம் தொடர்ந்தும் அந்த நாட்டு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

## இன்றும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழகத்துக்குத் தப்பிச் செல்லும் நிலையில் இன்று காலையும் 5 பேர் தமிழகத்தின் தனுஸ்கோடியை அண்டிய முதலாவது தீடையைச் சென்றடைந்துள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரே இவ்வாறு சென்றுள்ளனர். ஐவரையும் மரைய ன் பொலிஸார் மீட்டு மண்டபம் கொண்டு சென்றுள்ளனர்.

## தமிழருக்குத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ இன்று (24) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஊழியர் மட்ட உடன்படிக்கையைச் சபைக்கு சமர்ப்பியுங்கள். அந்த உடன்படிக்கையின்றி குழு நிலை விவதாங்களை நடத்திப் பயனில்லை – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்த மாட்டோம் என ஜனாதிபதி கூறியதில் எமக்கு ஆச்சரியமில்லை. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாமல் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்துக்கு வந்து, முன்னாள் ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரில் பிரதமராகி, பின்னர் நாடாளுமன்ற பெரும்பான்மையின் விருப்பத்தின் பேரில் ஜனாதிபதியானவர் என்பதனால் அவருக்குத் தேர்தலொன்றின் பெறுமதி புரியவில்லை. மக்களின் வாக்குரிமை தொடர்பில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அவரது பேச்சுக்கள் குறித்து நான் பொருட்படுத்தவில்லை.

69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானவர், 68 இலட்சம் வாக்குகளைப் பெற்று பிரதமரானவர், நிதி அமைச்சரானவர் உள்ளிட்டோர், திடீரென இருந்த இடத்தைக் கூட மறந்து வீட்டுக்குச் செல்ல நேர்ந்தது தேர்தலால் அன்றி மக்கள் போராட்டாத்தாலேயே. மக்களின் எழுச்சிமிகு போராட்டாத்தாலேயே அவர்கள் விரட்டப்பட்டனர். எனவே, தற்போதைய ஜனாதிபதியும் கூட இதனை மறந்துவிடக் கூடாது.

தேர்தலை நடத்த மாட்டோம் என ஜனாதிபதி கூறியதும் அதற்கு ஆதரவாக சபையில் இருந்த அடிமைகளின் ஒரு பகுதியினர் ஆரவாரம் செய்தனர். நாடாளுமன்றத்தில் சிலர் ஒரு அடிமைத்தனத்தில் இருந்து இன்னுமொரு அடிமைத்தனத்துக்கு மாறியுள்ளனர்.

ஜனாதிபதியின் உரைக்கு ஒரு சில அடிமைகள் ஆரவாரம் காட்டினாலும் நாட்டின் 220 இலட்சம் மக்கள் மிகவும் வருத்தம் கொண்டுள்ளனர். ஜனநாயகத்துக்கான மக்கள் சக்தி விரைவில் உருவாகும்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட நிலை முறையாக மறுநிலைப்படுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்தைப் மதிப்பதாக கூறும் ஜனாதிபதி, நேற்றுக் கூறிய அந்தக் கருத்தை உடனடியாக நீக்கி தேர்தலை நடத்தி, நாடு மீண்டு வர சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போதைய ஜனாதிபதி நன்றியுணர்வு அறிந்தவராக இருந்தால் போராட்டத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். போராட்டத்தினாலேயே அவர் ஜனாதிபதியானார். அமைதியான போராட்டம் வன்முறையாக மாறியது கடந்த மே 9 ஆம் திகதி நடந்த தாக்குதலாலேயே ஆகும்.

எந்தவிதமான வன்முறைகளையும் நாம் அனுமதிப்பதில்லை. அவ்வாறான வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வன்முறையும் மிலேச்சத்தனமுமின்றி இடம்பெற்ற போராட்டத்தை, அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களே வன்முறை ரீதியாக தாக்கினர்.

அதேபோல், அமைதியான பொதுமக்கள் போராட்டத்தை அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒடுக்க முயன்றதால், எதிர்க்கட்சியாக அதற்கு எதிராக முன் நிற்கின்றோம். அதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குகின்றோம்.

நாட்டின் பொருளாதாரத்தை அழித்த ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராக மக்கள் எழுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. அதேவேளை, பொய்ப் பிரசாரங்களால் எதிர்க்கட்சியை அழிக்க முடியாது – என்றார்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2022 இல் வெளியிடப்பெற்றது.